**11 R**

Register No. 11510

# முதல் இடைப்பருவத் தேர்வு – 2024

நேரம் : 1.30 மணி

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள் : 50

### பகுதி – அ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 10 x 1 = 10

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. நிதித் தகவல்களின் புறப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) பணியாளர் ஆ) நிர்வாகம் இ) உரிமையாளர்கள் ஈ) பொதுமக்கள்
2. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம்பெறாது? அ) நிதிநிலைக் கணக்கியல் ஆ) மேலாண்மைக் கணக்கியல் இ) மனிதவளக் கணக்கியல் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
3. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து இ)கணக்கியல் காலஅனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை
4. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு அ) இந்திய மைய வங்கி ஆ) உச்சநீதிமன்றம் இ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம் ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்
5. முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு........
அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் க/கு இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
6. ஒரு நிறுவனத்தின் சொத்துகள் மதிப்பு ₹2,20,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹1,60,000 எனில், அந்நிறுவனத்தின் முதல் அ) ₹3,80,000 ஆ) ₹1,60,000 இ) ₹2,20,000 ஈ) ₹60,000
7. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம். அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்
8. ஒரு கணக்கின் பற்று மொத்தத்தைவிட வரவு மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு
9. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும். அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும் இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்
10. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில் இ) ஒரு பருவகாலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

### பகுதி – ஆ

குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.17–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 5 x 2 = 10

11. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.
12. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
13. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?
14. இருப்பாய்வின் படிவம் தருக.
15. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2016 | ஜன. 1 | கையில் உள்ள அறைகலன் | 2,000 |
| | 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |
| | 30 | அறைகலன் விற்றது | 400 |

16. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | விற்பனை | 1,50,000 |
| வங்கிக் கடன் | 75,000 | கடனாளிகள் | 1,25,000 |

17. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுக்கான விளக்கக்குறிப்பு தருக.

சுவேதா என்பவரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| 2008 | ரொக்கக் க/கு | Dr. | | 3,00,000 | |
| ஏப்ரல் 1 | சுவேதா முதல் க/கு | | | | 3,00,000 |
| | (.....................) | | | | |
| 2 | வங்கி க/கு | Dr. | | 2,70,000 | |
| | ரொக்கக் க/கு | | | | 2,70,000 |
| | (.....................) | | | | |

### பகுதி – இ

குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. வினா எண்.24–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 5 x 3 = 15

18. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக. (ஏதேனும் 3)
19. கணக்கேடுகள் பராமரிப்பிற்கும், கணக்கியலுக்கும் இடையேயான வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 3)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

20. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்துக் கணக்கு மற்றும் பெயரளவுக் கணக்கு என்று வகைப்படுத்துக.
அ) வங்கி ஆ) கொள்முதல் இ) சசீர்த்தனா ஈ) தள்ளுபடிப் பெற்றது உ) விற்பனை ஊ) கொடுபடவேண்டிய கூலி
21. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக (ஏதேனும் 3)
22. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| a) | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| | ₹ 2,00,000 | = | ₹ 1,10,000 | + | ? |
| b) | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| | ₹ 20,000 | = | ? | + | ₹ 5,000 |
| c) | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| | ? | = | ₹ 70,000 | + | ₹ 80,000 |

23. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து ரொக்க கணக்கில் எடுத்து எழுதுக.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2016 | ஏப்ரல் 1 | சுஷ்மிதா என்பவர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 1,10,000 |
| | 10 | கூடுதல் முதல் இட்டது | 50,000 |
| | 28 | சொந்த செலவிற்கு ரொக்கம் எடுத்துக்கொண்டது | 20,000 |

24. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் மற்றும் பக்கத்தில் இடம்பெறுமா? அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா? எனக் காட்டுக.
i) வெளித்தூக்கு கூலி ii) விற்பனை iii) வாராக்கடன் iv) எடுப்புகள் v) உள் திருப்பம் vi) முதல்

## பகுதி – ஈ

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 x 5 = 15**

25. பின்வருவனவற்றிற்கான கணக்கியல் சமன்பாட்டு விளைவுகள் என்ன?
a) இலக்கியா ₹1,40,000 ரொக்கம் மற்றும் ₹60,000 மதிப்புள்ள சரக்குடன் வியாபாரத்தை தொடங்கினார்.
b) ₹20,000 மதிப்புள்ள அறைகலன்களை ரொக்கத்திற்கு வாங்கினார்.
c) அறைகலன் மீது தேய்மானம் ₹800
d) வங்கியில் செலுத்தியது ₹40,000
e) இணை வங்கி மூலம் மின்கட்டணம் ₹500 செலுத்தப்பட்டது. **(அல்லது)**
வாகன உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் சசிகுமாரின் ஏடுகளில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டு பதிவு தருக.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2017 | அக். 1 | வியாபாரம் தொடங்குவதற்கு இட்ட சரக்கின் மதிப்பு | 40,000 |
| | 3 | வணிகத்தில் இட்ட ரொக்கத்தின் மதிப்பு | 60,000 |
| | 4 | நந்தினியிடமிருந்து கடனுக்கு வாங்கிய சரக்கின் மதிப்பு | 70,000 |
| | 6 | நந்தினிக்கு திருப்பிய சரக்கின் மதிப்பு | 10,000 |
| | 10 | நந்தினியின் கணக்கில் செலுத்திய தொகை | 60,000 |
| | 15 | கலையரசிக்கு கடனுக்கு விற்ற சரக்கின் மதிப்பு | 80,000 |
| | 18 | கலையரசி திருப்பி அனுப்பிய சரக்கின் மதிப்பு | 20,000 |
| | 20 | கலையரசியிடமிருந்து ரொக்கம் ₹58,000 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது. | |
| | 25 | மின்னணு பரிவர்த்தனை மூலம் சம்பளம் வழங்கியது | 2,000 |
| | 30 | சசிகுமார் தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்துக்கொண்ட சரக்கின் மதிப்பு | 10,000 |

26. பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டின் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2017 | ஆக. 1 | ஜெயந்தி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 70,000 |
| | 2 | ஆர்த்தியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 10,000 |
| | 10 | வாடகை கொடுத்தது | 3,000 |
| | 20 | சந்தியாவிடமிருந்து பெற்ற கழிவு | 5,000 |

**(அல்லது)**

பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| 2017 | ஜூன் 1 | சுப்ரியா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 50,000 |
| | 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 8,000 |
| | 8 | கவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 9,000 |
| | 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | 4,000 |
| | 20 | சுபலட்சுமி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது | 5,000 |

27. நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக. (ஏதேனும் 5) **(அல்லது)**
யாஸ்விக் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.03.2023 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| கைரொக்கம் | 7,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 | பற்பல கடனீந்தோர் | 11,800 |
| சம்பளம் | 6,800 | முதல் | 25,000 |
| வாராக்கடன் | 200 | கொள்முதல் | 45,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 15,400 | விற்பனை | 50,000 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com